MUNICIPAL COUNCIL
JAFFNA

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 18 ஆவணி 3 ஜுலைகஸ் 12 இதழ் 190

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19-8-1986

## மாகாண சபையை எதிர்த்து வன்னியில் ஆர்ப்பாட்டம்

வவனியா நிருபர்

அரசின் மாகாணசபைத் திட்டத்தை எதிர்த்து வன்னிப் பிரதேசத்தில் மாபெரும் ஆர்பாட்ட ஊர்வலமொன்று நேற்று நடத்தப்பட்டது.

ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் இளைஞர்களும் கலந்து கொண்ட இந்த ஊர்வத்தில் பெண்களின் எண்ணிக்கையே அதிகமாகும். நாலாதிக்குகளிலிருந்தும் வந்து சேர்ந்தமக்கள் பெரும் ஆக்ரோஷத்துடன் மாகாணசபைக்கு எதிரான சுலோகங்களை தாங்கிச்சென்றதுடன் கோஷங்களையும் எழுப்பினர்.

சுமார்ஐம்பதுக்குமேற்பட்ட உழவுயந்திரங்கள், பெட்டிகள் பூட்டப்பட்ட நிலையில் ஊர்வலத்தில் நகர்ந்து சென்றன

நெடுங்கேணி, ஒமந்தை, புளியங்குளம் ஆகியப்பகுதிகளிலுள்ள சடைகள்யாவும் மூடப்பட்டிருந்தன. நெடுங்கேணி வவனியாவுக்கிடையிலான போக்கு வரத்துக்கள் யாவும் நிறுத்தப்பட்டிருந்தன.

ஊர்வலத்தின் இறுதியில் நெடுங்கேணி சந்தியில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் தமிழ்பிரதேசத்தின் இன்றைய நிலைமைகள் குறித்தும் எதிர்நடவடிக்கைகள் குறித்தும் பலர் உரை நிகழ்த்தினர்கள். (மா)

அரசு - கூட்டணி பேச்சுக்கள்:

# சுமுகமாக நடைபெறுவதாக

# இந்தியப் பிரதமர் ராஜீவுக்குத் தகவல்

கொழும்பு

இலங்கையின் இனப்பிரச்னைக்கு அதிகார பரவலாக்கல் மூலம் தீர்வொன்று காணுவதற்காக அரசுக்கும் கூட்டணிக்கும் இடையே மூன்றுநாட்களாக நடைபெற்றபேச்சுவார்த்தைகள், சுமூகமான முறையிலும் நடைமுறை ரீதியிலும் இடம்பெற்றுவருவதாக இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரப்பரவலாக்கல் மூலம் இனப்பிரச்னைக்குத் தீர்வொன்று காண அரசாங்கத்தினல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாகணசபைகள் திட்டம் பற்றி அரசுடன் 2ம் சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தவென ஏழுபேர்கொண்ட கூட்டணிக்குழுவொன்று கடந்த வியாழக்கிமை கொழும்புவந்தது தெரிந்ததே. வெள்ளி சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களும் தொடர்ந்து அரசுக்கும் கூட்டணிக்கும் இடையே பேச்சுக்கள் நடந்தன.

இப்பேச்சுக்களின் அபிவிருத்திகுறித்து கூட்டணியினர் இந்தியத் தூதர் திரு டிக்ஸிற்றை நேற்றுமுன்தினம் சநதித்து எடுத்துக்கூறினர்.

இதனையடுத்து பேச்சுக்களில் முன்னேற்றம் குறித்துத் தாம் இந்தியப் பிரதமருடன் தொடர்பு கொண்டு அவருக்கு தெரி

(4ம் பக்கம் பார்க்க)

### 'சுவிஸ்' தொலைக்காட்சி குழு இலங்கை வந்து சேர்ந்தது

கொழும்பு]

இனப்பிரச்னை தொடர்பாக ஆய்வுகள் நடத்துவதற்காக

[4-ம் பக்கம் பார்க்க]

### விசேட விமானத்தில் கூட்டணிகுழு திருமலை வந்தது

திருமலை

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் சிலர் திருமலைக்கு நேற்றுத் திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டனர்.

திருமலை முன்னுள் எம் பி. திரு. ஆர். சம்பந்தனின் தாயாரின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் வந்திருந்தனர்.

முன்னுள் எம் பி. க்களான திரு ஆர். சம்பந்தன், திரு. வி. யோகேஸ்வரன், திரு. குசை

[4-ம் பக்கம் பார்க்க]

வல்வையில்

## படையினர் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி, மற்றவர் காயம்

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மூத்துலிங்கம் சுந்தரராஜா (வயது 29) பலியானர். சின்னவன் (23 வயது) படுகாயமடைந்தார்.

நேற்றைய தினம் வல்வை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த நேரடி மோதலின் பின் வல்வை இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியான 'ஷெல்' தாக்குதல் மேற்கொளளப்பட்டதுடன், முகாமுக்குச் சிறிது முன்பாகவுள்ள மாடிக் கட்டிடத்திலிருந்தும் இராணுவத்தினர் பதுங்கியிருந்து துப்பாககிகளால் சுட்டபடியிருந்தனர்.

கடந்த இரு வாரங்களாக இராணுவ முகாமிலிருந்து சுமார் அரை மைல் தூரததிலுள்ள வீதியால் சென்றுவரும் பொதுமக்களைக் குறிபார்த்துச் சுட்டுக் கொன்றும், காயப்படுத்தும் வகையில் மாடிவீடுக் கூரைமேல் பதுங்கியிருக்கின்றனர்

நேற்றைய தினம் மாலையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## கோட்டை இராணுவத்தை வாபஸ்பெறக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து இராணுவத்தை வாபஸ்பெற வேண்டுமென்ற தீர்மானம் 'மக்கள் நடவடிக்கைக்குழு' கூட்டத்தில் நிறைவேறியது.

யாழ்.4ம் குறுக்குத் தெருவிலுள்ள சற்றடேறிவியூ, காரியாலயத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மக்கள்பாதுகாப்பு குறித்து பலரும்கருத்து தெரிவித்தனர்.

மக்களின் பாதுகாப்பு விடயமாக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கான விடயங்கள் பற்றி ஆராய்வதற்கு இன்று பிற்பகல்வரை, இக்கூட்டம் ஒத்திவைக்சப்பட்டது

யாழ்.நகரில் ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்திற்குள் வாழும் பொதுமக்கள் இன்று நடைபெறும் கூட்டத்திற்கு தவருது சமூகமளித்து அபிப்பிராயங்களை தெரிவிக்குமாறு மக்கள் நடவடிக்கைகுழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### பிரபல குற்றவியல் நிபுணர் வருகை

கொழும்பு, திங்கள்

உலகப்புகழ் பெற்ற குற்றவியல் விசாரணை நிபுணர் பேராசிரியர் மார்ஷல் தற்போது இலங்கை வந்துள்ளார்.

தற்போது கொழும்பில் நடைபெறும் இந்தோ பசுபிக் சட்டவைத்திய சட்ட விஞ்ஞான நிபுணர்களின் 2-வது மாநாட்டில் உரையாற்றுவதற்கே அவர் இங்கு வருகை தந்துள்ளார்.

## கோட்டைமீது தாக்குதல்; படையினரில் ஒருவர் பலி

### —அரசு அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

வடபகுதியில் நேற்று இடம்பெற்ற இரண்டு மோதல்களில் பாதுகாப்புப் படைவீரர் ஒருவரும் மூன்று தீவிரவாதிகளும் உயிரிழந்ததாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தீவிரவாதிகள் யாழ். கோட்டை இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்திய போது இராணுவத்தினர் ஒருவர் கொல்லபபட்டதாகவும், வல்வெட்டித்துறை இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தியபோது தீவிரவாதிகளில் மூவர் கொல்லப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. [ஓ]

இன்று

## கூட்டணி - லலித் சந்திப்பு

(கொழும்பு)

தற்போது கொழும்பிலிருக்கும் கூட்டணிக் குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு அத்துலத்முதலியைச் சந்திக்கவுள்ளனர் நாளை அவர்கள் வெளிவிவகார அமைச்சர் ஜனப் ஏ சி. எஸ் ஹமீட்டையும் சந்திக்கவுள்ளனர்.

கண்டியில் தற்போது நடைபெற்றுவரும் பெரஹரவிற்காக ஜனதிபதி அங்கு சென்றிருப்பதினுல் அரசு - கூட்டணிப் பேச்சுக்கள் வியாழன் வரை ஒத்திவைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

மாகாணசபைகளின் நிர்வாக ரீதியிலான கட்டமைப்புப்பற்றியும், அதிகாரத்தை, மத்திய-மாகாண அரசுகளிடையே பங்கீடுசெய்வதுபற்றியும் இன்றும் நாளையும் நடைபெறும் சந்திப்புகளில் ஆராயப்படுமெனத் தெரியவருகிறது. [ஊ-சி]

'யால' சம்பவங்கள்:

## 'உள்ளக' வேலை என அரசு தகவல்!

கொழும்பு, திங்கள்

யால சரணலயத்தில் கடந்த சில நாட்களுக்குமுன் ஒரு வீடு தீக்கிரையாக்கப்பட்டது உட்பட பல சம்பவங்களுடன் வனவிலங்கு பாதுகாப்பு ஊழியர்களும் சில வெளியாட்களுமே சம்பந்தப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் பற்றிஇன்று காலை ஆராய்ந்த ஜனதிபதி தலைமையிலான குழு விடுத்துள்ள அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஊ)

சட்டத்தரணிகளற்ற
பிரசித்த
நொத்தாரிசுகளுக்கு
அண்மையில் காணி உறுதி எழுதுவது சம்பந்தமாக
அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதம் தொடர்பாக
ஆராய்வதற்கான கூட்டம்
20-08-86 புதன்கிழமை அன்று
யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலில்
காலை 11-00 மணிக்கு நடைபெறவுள்ளது.
தவருது சமுகம் தரவும்.
இங்ஙனம்
நேசன்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(C-4149)

# விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு சோடி நல்லின பொமநேரியன் 'நாய்க்குட்டிகள் (7 கிழமை Brown) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மனேன் மாஸ்ரர், நவாலி தெற்கு. மானிப்பாய். C 4126

J፡ V. C.-T. V. அன்ரனுவுடன் 20 அங். கலர் விற்பனைக்குண்டு தொடர்பு: துர்க்கா டிரேடர்ஸ் 85, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். C 4139

வீட்டுத்தளபாடங்கள் கட்டில், மெத்தைகள், கசற் றேடியோ, Baby Cot, Show Case, கண்ணாடி மேசைகள். Formica சாப்பாட்டு மேசை கதிரைகள், கிளாஸ், பித்தளை, சில்வர் பைரக்ஸ், Pyrex வகைகள், T.V. Stand, Form Rubber மெத்தைகள் சிங்கர் Zig Zag தையல் மெசின், ஹோல் செற், மற்றும் பல உடன் விற்பனைக்கு. M. தியாகராஜன், 326 பிரதான வீதி. யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தியருகில்) (C 4067)

## தேவை

இறைச்சிக்கு கோழிதேவை கிலோ 35 ரூபாவுக்கு மேற்பட்ட விலைகளில் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. phone: 23131. (C 4106)

தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) புதிய, பழைய, எந்தநிலையிலும் வாங்குவோம். தொடர்பு: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி (3-ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம். C 4121

B. sc. இன்சினியர்கள் 10 வருட அனுபவம் - சம்பளம் 6000/-. உதவி இன்சினியர்கள் N. D. J. அல்லது Diploma, கட்டிடவேலைகளில் சம்பளம் 4500/-. விற்பனை மனேஜர் Diploma பட்டதாரி வர்த்தகம் அல்லது பூவியல் 5000/- விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C 4142 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 4142

## வகுப்புகள்

A/L பரீட்சை எழுதியவர்கட்கு அரிய சந்தர்ப்பம். புதிய தொழில் நுட்பவகுப்புகள் Electronic Engineering: Radio and T.V. (Antenna Deck), வெல்டிங், வயறிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்தி சந்திக்கருகாமையில்) 328 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 4124

Nursery School இல. 22, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளியில் அனுபவம் மிக்க பிரபல ஆசிரியர்களால் பாலர் பாடசாலை நடத்தப்படும். பிள்ளைகளைச் சேர்க்க விரும்புவோர் மேற்படி விலாசத்திற்கு நேரில் வரவும். C 4141

## மணப்பந்தல்

பொறியியலில் முதுமானிப் பட்டம் பெற்று வெளிநாட்டில் உத்தியோகம் பார்ப்பவரும், இம்மாதக்கடைசியில் விடுமுறையில் இலங்கைக்கு வர விருப்பவருமான யாழ்ப்பாண இந்து தமிழ் இளைஞருக்கு (வயது 31) நல்ல உயரமும் அழகும், நற்குணமும் பொருந்திய மணமகள் தேவை. சட்டம், பொறியியல், மருத்துவம், கணக்கியல் ஆகிய துறைகள் ஒன்றில் பட்டம் பெற்றவராகவோ அல்லது படித்துக் கொண்டிருப்பவராகவோ இருத்தலோடு சமூக சேவையில் நாட்டமுள்ளவராகவும் இருத்தலவசியம் அண்மையில் எடுத்த புகைப்படத்துடனும் ஏனைய விபரங்களுடனும் உடனே விண்ணப்பிக்கவும் விளம்பர இல. C 4140 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 4140

## சேவை

நல்லூர் ஆதீனத்திற்கு முன்பாக அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில் அண்ணா கோப்பி வாங்குவதோடு நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் வெற்றுப் பைக்கட்டுகளை கொடுத்து இனம் பொருள்களை பெற்றுக்கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில். A 1153

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ (A 1041)

## அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. 72 நம்பிக்கைச் சொத்து

**இணுவில் கந்தசாமிகோவில் தர்மகர்த்தாக்களைத் தெரிவதற்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் பற்றியது**

மேற்கூறிய வழக்கில் மல்லாகம் மாவட்ட நீதிபதி அவர்களின் கட்டளைக்கு அமைய 22 07-86ல் மல்லாகம்மாவட்ட நீதிமன்ற விளம்பரப் பலகையிலும், இணுவில் கிராம சேவையாளர் அலுவலகத்திலும் பொதுமக்களின் பார்வைக்காகச் சந்ததிப்பட்டியலும் உபயகாரர் பட்டியலும் வைக்கப்பட்டுள்ளன.

இப்பட்டியல்களில் இடம் பெறும் விண்ணம்பதாரர்கட்கு எதிராக ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 26-08-1986 பிற்பகல் 3 மணிக்குமுன், அவை எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப் படவேண்டும் என இத்தால் கோருகிறேன்.

1986ம் ஆண்டு ஓகத்து மாதம் 14ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்.
A 1142

## நல்லூரில் இன்று திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் தேரடியில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தொடக்கம் திருவாசகம் முற்றோதல் நடைபெறும் பூரணை நாளையொட்டி சைவசங்க அடியார்களால் நடாத்தப்படும் இப் பாராயண நிகழ்ச்சியினை அனைவரும் கேட்டுப் பயன் பெறலாம். (ப)

## நூல் வெளியீடு

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் அமரர் யோகி க. கார்த்திகேசு உரை எழுதிய தேவகாண்டம் உரைப் பகுதியை அச்சிட்டு நூல் வடிவில் வெளியிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அமரர் கார்த்திகேசு எழுதிய கந்தபுராண யுத்தகாண்டம் கந்தரநுபூதி ஆகியவற்றிகுரிய உரை நூல்களின் யுத்தகாண்ட உரை நூலை கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை இந்து மா மன்றத்தினரும் கந்தரநுபூதியை வழக்கம்பரை சனசமூக பஜனைச் சபையாரும் வெளியிட்டனர்.


தேவகாண்ட உரை நூல் வெளியிடும் பொறுப்பை அமரரது அனுதாபிகள் பொறுப்பேற்றுள்ளனர். [சி-இ]

## சேவை

யாழ் நகரில் தெளிவான ''போட்டோஸ்ரற்'', ''றோனியோ'' பிரதிகளுக்கும், தமிழ, ஆங்கில ''ரைப்பிங்'' வேலைகளுக்கும், 'கிளீன்கட்', 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (C-4023)

திருமணம் நிறைவேற்றுதல் சிறந்த பொருத்தத்துடனும், வரதட்சணையுடனும் ஒழுங்கு செய்து கொள்ளவும். காணி, வாகனம், கொள்வனவு, விற்பனவு ஒழுங்குக்கும் இன்றே நாடுங்கள்: தர்சினீஸ், அரசடிச்சந்தி. சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (C 4098)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மருதப்பு கண்ணையா**
(உரிமையாளர் மாகோ ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்)

மலர்வு: 12-12-1907
உதிர்வு: 23-08-1983

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும் அனைவரையும் கவர்ந்து அண்டவன் அடியில் அமரத்துவம் பெற்ற தங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

44/4, கல்லூரி வீதி, நீராவியடி. யாழ்ப்பாணம். C 4117

## யாழ்ப்பாண அக்கடமி
## க. பொ. த. உயர்தர பரீட்சை
## ஆகஸ்ட் 1987 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

**வகுப்புகள் 10-9-86ல் ஆரம்பமாகின்றன.**

அதிபர்,
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(A 1130) தொலைபேசி எண்: 22617

## பிரயாண ஒழுங்குகள்

★ இங்கிலாந்து ★ ஜேர்மனி
★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு ஏழுபேருக்கு வாய்ப்புண்டு.

பாஸ்போட், விசா, ரிக்கற்றிங் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

**“ஸ்ரனிஸ்”**

1/1, றக்கா லேன், சுண்டிக்குளி.
[C-4138]

## மாணவர்கள் கவனத்திற்கு

1. டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் லண்டன் பிற்மன் தட்டச்சு, சுருக்கெழுத்து (தமிழ், ஆங்கிலம்) வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
2. Book Keeping வகுப்புக்கள், Spoken English with Grammer வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
3. தட்டச்சு வேலைகள், றோனியோ வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:-

**The Jaffna Education Centre**

பட்டப்படிப்புக்கள் பகுதி [மேல்மாடி]
22, ராமையா செட்டியார் லேன்,
(சாந்தி சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம். (A-1052)

## பிரயாண ஒழுங்குகள்

**டென்மார்க்**

(இடைநிறுத்தப்பட்ட எமது டென்மார்க் பயணம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது)
கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்
(வாரத்தில் இருமுறைப் பயணம்)

லிபியா – (Labourers)
சவூதி – கிளீனேர்ஸ்
குவைத் – கிளீனேர்ஸ்
ஈராக் – ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**யூனிவேர்சல்**
**ஏஜென்சி**

125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]
(A 1044)

### மணிவாக்கு

அவை அவைகளின் கனிகளைக் கொண்டே அவைகளை அறிவீர்கள். முட்செடிகளிலே திராட்சைக் குலைகளையும், முட்பூண்டுகளிலே அத்திப் பழங்களையும் பறிப்பாருண்டோ?

—பைபிள்

# நமது நோக்கு

## வம்மின்! வடக்குக்கும் கிழக்குக்கும்

இனியது என்று ஒன்றைப் பெறமுயலுதலும் இன்னாதது என்று ஒன்றை அகற்ற முயலுதலும் உலக மக்களது இயல்பு. பண்பாடு அடைய முயலுபவர் போக்கு அத்தகையதல்ல. இனியது, இன்னாதது வாயிலாக இயற்கை அன்னை உயிர்களைத் திருத்தி அமைக்கிறாள்.

தானாக வந்தடையும் இனியதனிடத்து நல்லோர் நாட்டம் வைப்பதில்லை. தானாக வந்தெய்தும் தீமையினிடத்தும் அவர்கள் வெறுப்புக் கொள்வதில்லை.

இந்த உண்மை வெறும் வேதாந்தம் என்று தள்ளிவிடுவதற்குரிய காலத்தில் நாம் வாழவில்லை. இந்த நாட்டை விட்டு வெளியேற விரையும் மக்கள் தமிழர்கள் மட்டுமல்ல, தானாக வந்தெய்தும் தீமையை விலக்கிக் கொள்ளும் மனப்போக்குடையவர் ஆயிர ஆயிரமாக வெளியேறினர்; வெளியேறுகின்றனர்.

நெய்க்குடம் உடைந்தால் நாய்க்கு வேட்டை என்பார்கள். உடைந்தது தயிர்க்குடம் அல்லது பாற்குடம் ஆனாலும் இன்று வேட்டை ஆடும் நாய்கள் அதனைக் குடிப்பதை விட தங்களுக்குள் சண்டை போடுவது விசித்திரமானது.

உடைந்த குடம் எதுவானாலும் எங்கள் வாழ்வு வளம் பெறுவது எவ்வித எதிர்பாராத சம்பவங்களிலும் அதிகம் தங்கியிருக்கவில்லை; துன்பத்தைத் தவிர்த்துவிட்டு இன்பத்தை மட்டும் இவ்வுலகில் எவரும் பெறுவதில்லை என்ற மன உறுதி- இங்கு குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்களின் மன உறுதி. இதனை உள்ளூர் வெளியூர் நிருபர்கள், அரசியல்வாதிகள் எளிதில் உணர்வதில்லை.

நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் உயிர் வாழ்தல் அரிதினும் அரிதென்பதை உலகனைத்தும் உணர்கின்றது; அதே சமயம் நாட்டின் ஜனாதிபதி அதனை வேறுவிதத்தில் விளக்கிவருகிறார்.

இன்று கண்டியில் பெரஹரா அலங்காரத்தைக் கண்டுகளிக்கும் ஜனாதிபதிக்கும் அவருடைய அரசியல் சகாக்களுக்கும் நாடளாவிய இன்றைய நிலை புரியாத புதிர் என்று எவரும் சொல்லத் துணியார்; அதனைச் சீர்படுத்தும் பொறுப்பு, சர்வ வல்லமை படைத்த ஜனாதிபதிக்கே உண்டு. அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதில் உண்டான தர்மசங்கடங்கள் நாளுக்கு நாள் பெருகிவருகின்றன அவை அனைத்தையும் தட்டிக்கழிக்காது, 'சரண்' என்ற பேச்சுக்கிடமளிக்காமல் ஒன்பது வருட காலம் சமாளித்த திறமை எத்தகையது?

மறக்கும் சக்தியும் அதற்கு மேலாக சிரிக்கும் சக்தியும் ஆட்சித் தலைவருக்கு எத்துணை அவசியமென்பது, ஜே. ஆரின் குட்டிக்கதைகள் நிறைந்த தெளிவான நகைச்சுவைப் பேச்சுக்களில் காணப்படுகின்றன.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பசுப்பிக் பிராந்திய மருத்துவ சட்ட நிபுணர் மாநாட்டைத் தொடக்கிவைத்தபோது அங்கு குழுமியிருந்த நிபுணர் குழாமிற்கு'' இயலுமானால் இந்நாட்டின் வடக்கையும் கிழக்கையும் போய்ப் பாருங்கள்'' என்றார்.

'மருத்துவ, சட்டத்துறை (Forensic Law) இன்று விரிவடைந்த நிலையில் உங்கள் விஜயம் புதிய பிரச்னைகள் கருத்துக்களுக்கு உதவும். பாதுகாப்பாகப் போய்வருவது வேறு விடய'மென அவர்களைச் சிரிக்கவைத்தார்.

துன்பம் ததும்பும் அந்தச் சிரிப்பும், இத்தனை காலமாகக் காலத்துக்குக் காலம் பேசிவரும் முரண்பட்ட ஆலோசனைகள் குறிப்பிடும் மறக்கும் சக்தியுமே இந்த ஆட்சி இவ்வளவு காலம் நிலைத்திருப்பதன் இரகசியம்.

றோயல் 'கல்லூரியில் சிறிமாவோ கல்வி கற்றிருந்தால் இன்று குழப்பச் செயல்களில் பங்கு கொள்ள மாட்டார்'என்பதும் வெறும் பேச்சல்ல. தமது ஆட்சிக்கு ஆபத்து தமிழர்களால் அல்ல; சுதந்திரக் கட்சித் தலைவியாலே என்ற அச்சம் அந்தச் சிரிப்பில் தொக்கு நிற்கிறது.

இன்று நடைபெறும் போரும் அதனால் நாடு காணும் பெருமாற்றமும் றோயல், சென் தோமஸ் அளித்து வந்த பிரபுத்துவ கல்விமுறை தண்ணீர் கண்டிருப்பதைக் குறிக்கிறது.

அண்மையில் மறைந்த சென்தோமஸ்இளைப்பாறிய பேரதிபர் கனன் டிசேரம் போன்ற பேராசான்களை இந்த நாடு காண்பதரிது. இருப்பினும் தமது அந்திய காலத்தில் சென் தோமஸ் றோயல் போன்ற பிரபல, கல்லூரிகள் நாட்டின் பிரதமர்கள், ஜனாதிபதியை உருவாக்கிய போதும், மக்கள் உண்மைச் சுதந்திர வாழ்வை அனுபவிக்க உதவவில்லை என்ற கவலைகொண்டிருந்தாரெனக் கொள்வது நியாயமாகும். அவருடைய மனைவியும் மக்களும் நாட்டைவிட்டு வெளியேற நேரிட்டது இதற்கு சான்றாகும்.

வடக்கிலும் கிழக்கிலும் நிரம்பிவழியும் துன்டங்கள், நாடனைத்தையும் திருத்தியமைக்க உதவும் அரசியல் (பயங்கர) வாதமென்பதை பொறுமை உணர்த்தும்.

### தாக சாந்தி

யாழ்ப்பாணம், செவ்வநயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வழமை போல் நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச்சபையினர் இம்முறையும் பக்தர்களுக்கு தாக சாந்தி அளிக்கும் பணியை மேற்கொண்டுள்ளனர். [சா]

# பசுவதையும் மாமிச உணவும்

பசுவதையின் கொடூரத்தைப்பற்றி அண்மையில் ஒரு சிறுகதை படித்தேன். அக்கதையில் விபரிக்கப்பட்ட துயரமான விடயங்களை அறிந்தால் மாமிச உணவை புசிப்பவர்கூட அவ் உணவை பெறும்வகையை வெறுப்பார்கள்! ஆடு மாடுகளை சித்திரவதை செய்து கொல்வதை தடுக்க ஆவன செய்வர்கள் என்ற நல்நோக்குடன் அக்கதையின் முக்கிய விபரங்களின் சுருக்கம்:

ஒரு செல்வாக்குள்ள அம்மா ஒரு அல்ஷேசன் நாய் வளர்த்தா. அந்த நாய்க்கு காலையில் பால், ரொட்டி, மீன், எண்ணெ, மதியத்துக்கு வேகவைத்த பீஃப் (மாட்டிறைச்சி) ஒரு நாள் வழக்கமாக பீஃப் வங்கி கொடுக்கும் பையன் வராதபடியால் அந்த அம்மாளே காரை எடுத்துக்கொண்டு டிரைவருடன் பீஃப் விற்கும் சேரிக்குசென்று அங்கே கண்ணுற்ற கோரக் காட்சிகளையும், அவபட்ட துன்பத்தையும் வேசனையையும் அவசொன்னபடியே கீழே தருகிறேன்:-

''கப்பிச் சாலையில் வண்டியை திருப்பி ஓட்டினான் டிரைவர். சேரியை கடந்ததும் மேட்டில் சின்னதாய் ஒரு ஓட்டுக் கட்டிடத்தின் யன்னல் வழியே மாலை மாலையாக தொங்கும் மாமிசத் துண்டங்கள் என் கண்ணில் தெரிந்தன. அப்போது 'ஹய், ஹைய்' என்ற சத்தம் கேட்டு திரும்பினேன். எலும்பும் தோலுமாக இருந்த மாட்டை முண்டாசு கட்டிய ஒருவன் இழுத்துக் கொண்டு வந்து கட்டிடத்தின்முன் நிறுத்திவிட்டு, கட்டிடத்தினுள்ளே சென்று ஒரு இரும்பு உலக்கையும் பட்டாக் கத்தியுடனும் வந்தான். நான் வெலவெலத்துப்போனேன் 'தடக்'கென்று காரிலிருந்து இறங்கி 'இந்தாப்பா, இந்தாப்பா... இப்போ வெட்டாதே,ஒரு சில நிமிஷம் பொறுத்துக்கோ... நான் போயிடறேன்' என்று பதறிய வண்ணம் குரல் கொடுத்தேன் டிரைவர் பக்கம் திரும்பி'ஓடு. ...சீக்கிரம் வாங்கிண்டுவா. பெரியதுண்டமாயிருந்தாலும் பரவாயில்லை...' என்று பரபரத்தேன்.

என்வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து நின்ற மனிதனையும், அவன் அருகே நின்ற அடிமாட்டையும் நான் பார்த்தேன். இளம் சிவப்பு நிறப் பசு உடம்பு சதைப்பற்றே இல்லாமல் குச்சியாய் நின்றது. அதன் மூக்கில் மூக்கணங் கயிறு இரண்டு கொம்புகளிலும் பூசப்பட்டிருந்த பச்சை சிவப்பு வர்ணங்கள் நான்கு நாட்களுக்கு முன் கழிந்த மாட்டுப் பொங்கலை நினைவூட்டிது.

அடிமாடாக விற்கப் போகும் மாட்டிற்கு பூஜை செய்து மாட்டுப் பொங்கல் கொண்டாடியிருக்கிறான் அதன் சொந்தக்காரன்!

''அருகில் நின்ற மனிதனின் கைகளில் இருந்த உலக்கையையும், பட்டாக்கத்தியையும் பார்த்த பசு என்ன நினைத்துக் கொண்டிருக்கும் என்று எனக்குத் தோன்றியது!''

இன்னும் சில நிமிஷங்களில் சாவதற்காக இங்கு நிற்கிறோம் என்று அதற்குப் புரிந்திருக்குமோ? அந்தக் கரிய கண்களில் ஏக்கமா பரவிக்கிக்கிடக்கிறது, அதன் முகத்தில் ஏனிந்தப் பரிதாபம். அதைப் பார்க்கப் பார்க்க என்னுள் வேதனை பொங்கியது. 'பொறுமையில் பசுபோல' என்கிறார்களே, அது இதனால் தானா? பொறுமை என்றால் இதுதானா! இவைகள் எதையுமே உணராமல் ஜடமாய் நிற்கும் மனிதன், ஐயோ! எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஹோனை அடித்து டிரைவரை துரிதப்படுத்தினேன். அவனும் வந்து விட்டான்.

நான்கு அடிகள்கூட போயிருக்க மாட்டோம் திரும்பியதும்,

அந்த சம்பவத்தைப் பார்த்தேன். அந்த அமானுஷ்ய கதறலைக் கேட்டேன்,

''அ...ம்...மா'' நான் கேட்டுக் கொண்டபடி ஐந்தே நிமிஷங்கள் பொறுத்துவிட்டு தன் வேலையை கவனித்து விட்டான் அவன்.

மாட்டின் தலையை வேறொரு ஆள் பிடித்துக் கொள்ள முண்டாசு கட்டினவன் இரும்பு உலக்கையால் மாட்டின் கொம்புகளுக்கிடையில், அதன் நெற்றிப் பொட்டில் ஓங்கி ஒரு அடி வைக்கவும்...

'அம்...ம்...மா' பரிதாபமாய் அலறிய அந்தப்பசு கண்கள் பிதுங்க. வாயில் நுரை தள்ள, கால்கள் கோணல் கோணலாய் இழுக்க பின்பக்கம் சாணம் தள்ள பொத்தென்று கீழே விழுந்தது.

இரண்டாவது மூன்றாவது அடி, பரத்திக் கொண்டு கீழே விழுந்த மாட்டின் கால்கள் துடித்துக்கொண்டிருக்கையிலே பற்றவன் பட்டாக் கத்தியை அதன் கழுத்தில் வைத்து அறுக்க ஆரம்பித்தான்.

கார் கிளப்பிய ரிவர்ஸில் சென்று நெடுஞ்சாலையை அடைய எடுத்துக்கொண்ட 3 அல்லது 4 நிமிடங்களில் இத்தனையும் நடந்துவிட்டன.

சொக் அடித்தவளை போல பிரமை பிடித்துப் போனேன் நான்.

பார்த்த காட்சியின் அதிர்ச்சி தாளாமல் வேதனையைத் தாங்கமுடியாமல் கண்களில் இருந்து தண்ணீர் பிரவாகமெடுத்தது.

'என்ன அநியாயமாய் கொல்லுகிறார்கள். இப்படி சித்திரவதை செய்தாகொல்ல வேண்டும்? மயக்கமடையச் செய்து கொல்லக் கூடாதா.' என்று எல்லாம் அரட்டினேன்.

முடிவாக இனிமேல் நாய்க்கு மாமிசம் வேண்டாம். இந்த மாதிரி சித்திரவதைபட்டு சாகடிக்கப்படும் மாட்டின் கறி வேண்டாம்.

அம்மாளுக்கு வைராக்கியம் ஏற்பட்டு விட்டது. நாய்க்கு மாட்டிறச்சி வைப்பதை நிறுத்தியதினால் நாய் பல நாளாய் உணவு உண்ணாமல் பட்டினி கிடந்தது.

### செ. இரத்தினசபாபதி

நாயில் உள்ள பாசத்தால் அம்மாவும் பட்டினி கிடந்தா ஆனால் எத்தனை நாளுககு இப்படி பட்டினி கிடக்க முடியும் அம்மாளின் வைராக்கியம் நாட் செல்ல நாட்செல்ல கரைந்து விட்டது. பழையபடி நாய்க்கு மாட்டுக்கறி வாங்கி வைக்க ஆரம்பித்து விட்டா. பசு மாட்டின் துன்பத்தை விட நாயினால் கிடைக்கக்கூடிய இன்பம் பெரிதாகிவிட்டது அந்த அம்மாளுக்கு.

இந்த மனமாற்றத்துக்கு அவ சொன்ன காரணங்கள்:- ''மாலையில் கொசு உபத்திரவத்திற்காகவும் எறும்பு தொல்லைக்காகவும் ஃபிளிட் அடித்தது நினைவுக்கு வந்தது. துடித்து துடித்து கொசுக்கள் கீழே விழுந்த போது 'தொலைந்தாயா' என்று நான் சந்தோஷப்பட்டேன்! ஃபிளிட் நெடி தாங்காமல் எறும்புக் கூட்டமும் 'கன்னு

(5-ம் பக்கம் பார்க்க)

★ இன்று நல்லூர்க்கந்தன் 10-ம் திருவிழா

## நல்லை அண்ணல்

பித்தந் தெளியவருள் பாலிக்குந் தில்லைகனில்
பித்தஞ்செய் பித்தனா ரின்பிரிய — புத்திரனை
எத்தினமும் எக்கணமும் எவ்வெவர்கள் வேண்டிடினும்
அத்தனையுஞ் செய்வான் அவர்க்கு.

பெண்ணாசை போக்குவான்! பேரின்ப மூட்டுவான்;
கண்ணன் மருகனுங் கார்நல்லை—அண்ணலவன்
அல்ல லுறுமடியார்க் கானந்த வாழ்வளிப்பான்;
நல்ல உயர்வளிப்பான் நாடு.

மாடஞ்சூழ் நல்லைநகர் மாட்சியுள மாமுருகன்
மாடஞ்சூழ்ந் தஞ்சலிசெய் மாமக்கள்—மாடண்டுந்
தொல்லை தருபிணிகள் தொட்ட மடிமிடிநோய்
ஒல்லை தனிலொழிப்பான் ஓது.

-கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

★ ★ ★ ★

## தொல்லைதீர் நல்லையான் மஞ்சஉலா

திருநல்லூர்ப்பதியமர்ந்த கந்தவேளே
திருவடியார் துயர்தீர்க்க மனமிரங்கி
வருமுருகா மால்மருகா என்று வாழ்த்த
வரவருளி வினையொழிய வண்ணமஞ்சம் வாரீர்.

கந்தா நின்மலரடியை சிந்தைவைத்து
காலமெலாங் கலங்கிநொந்து கசிந்துவாடி
வெந்துருகி சோருகின்றோம் வினைகள் தீர்க்க
வேலவரே ஒளிர்மஞ்சம் விளங்க வாரீர்.

ஓங்காரத்துட்பொருளை உணரவைத்தீர்
ஒருகனிக்காய் பழனிமலை ஆண்டியானீர்
பாங்கான அன்னை தந்தை பரிந்தும் வாரா
பக்தருக்காய் மணிமஞ்சம் பரிந்து வாரீர்.

சூரனுடல் பிளந்து மயில் சேவலாகத்
தொண்டு செயப் பணித்தவருள் சொற்கடங்கா
பாடுபடுமடியவாகள் பணிந்து வேண்ட
பச்சைமயில் ஏறி மஞ்சம் பவனி வாரீர்.

அருளொழுக வதனங்கள் ஈர்மூன்றானீர்
ஆறிரண்டு அபயமருள் கரங்களானீர்
எழில் வேலைப் பகைதீர்க்க ஏந்தி நின்றீர்
ஏழைஉய்ய எளில்மஞ்சம் எழுந்தருளி வாரீர்.

— சு. நா. கந்தையா

## கடைசி நேர வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

செற்றி, குஷன் செற்றி, உஷா தையல்மெசின், டெக் மொடல் கசற்செற், 17'' ஷம்போ T.V. 14'' கோல்ட் ஸ்ரார் T.V விற்பனைக்குண்டு தொடர்பு: 41, பார்க்றோட், குருநகர், யாழ்ப்பாணம். [C 4159]



### புனிதமான இயக்கங்கட்கு பணிவான ஒரு வேண்டுகோள்



எமது மகன் கனகலிங்கம் உதயகுமார் (14 வயது) 12-8-1986 தொடக்கம் 198/1, பொன்னப்பா ஒழுங்கை வண்ணார்பண்ணை வீட்டிலிருந்து காணாமல் போய் விட்டார். இதனால் நாம் மிகவும் வேதனையில் ஊண் உறக்கமின்றி கவலையில் ஆழ்ந்துள்ளோம். தயவு செய்து எங்கள் மகனை எம்மிடம் மீட்டுத்தந்து உதவுவதற்கு தங்கள் ஆக்கபூர்வமான உதவிகளை எமக்கு வழங்கும் வண்ணம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தந்தை, தாய், சகோதரர்கள்.
(A 1156)



லிடோ
காலை 10-30, 2-30, 4-30, 6-30.
Dragon Lee-As Golden Dragon
Johnnie Chan- As Silver Snake
in
GOLDEN DRAGON SILVER SNAKE
(Karate, Action, Thrills and Color)
Showing first time in Jaffna

கடைசி வாரம்
வெலிங்டன்
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனா
வீரப்பா, நம்பியார்
தங்கமலை ரகசியம்
[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.


## பிரஜைகள் குழு கோரிக்கை

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறைப் பிரஜைகள் குழுவினர் நான்கு மாதத்திற்கான வறுமை நிவாரண முத்திரைக்குரிய பொருட்களை நியாயமான விலைகளில் தரமான பொருட்களாகப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விநியோகம் செய்வதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்துகொள்ளுமாறு ஊர்காவற்றுறை உதவி அரசாங்கஅதிபரிடம் மகஜர்மூலம் கேட்டுள்ளார்கள். [இ]

## புற்றுநோயாளருக்கு உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

புற்று நோயாளருக்கு உதவு முகமாக நல்லூரில் உண்டியல் வைக்கப்பட்டு நிதிசேகரிக்கப்படுகிறது.

ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் இந்நோயாளர்களின் நலன்கருதி தாராளமாக உதவுமாறு வடபகுதி புற்று நோயாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. [எ]

### மாகாண சபைகளுக்கு நிதி

# ஆராய நிதியமைச்சுக்குழு இந்தியா செல்லும்

[கொழும்பு, திங்கள்]

அரசின் உத்தேச மாகாண சபைகள் திட்டம் அமுல்படுத்தப்படுகையில், மத்திய மாகாண நிர்வாகங்களுக்கிடையில் தோன்றக்கூடும் பிரச்னைகளை தீர்க்கும் வழிமுறைகள்பற்றி ஆராய்வதற்காக நிதி அமைச்சின் உயரதிகாரிகள் குழுவொன்று இந்தியா செல்லவுள்ளது.

மாகாண சபைகளுக்கு நிதி வழங்குதல், வரி சேகரித்தலும் பங்கிடுதலும், திட்டமிடல் பணிகளில் இந்திய பட்ஜெட் விபரம் எவ்வளவு தயாரிக்கப்படுகிறது போன்ற விஷயங்களில் இந்திய அனுபவம்பற்றி இக்குழு விசேடமாக ஆராயுமெனத் தெரியவருகிறது. [ஊ]

## வீரஅஞ்சலி சுவரொட்டிகள்

வவனியா, திங்கள்

வீரமரணமடைந்த ராஜ்குமாருக்கு வீர அஞ்சலி என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பெரிய வர்ண சுவரொட்டிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு, முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய பகுதிகளில் நேற்று இச்சுவரொட்டிகள் காணப்பட்டன. [மா]

## ஈ. பி. ஆர் எல். எவ்: மேற்பார்வையில் மினிசினிமாக்கள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் செயற்பட்டு வரும் மினிசினிமாக்களை ஓர் ஒழுங்கமைப்பிற்குள் கொண்டு வந்து தமது ஸ்தாபனத்தின் கண்காணிப்பின்கீழ் அவற்றை செயல்பட அனுமதிக்கப்போவதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இம்மாதம் 24-ம் திகதி யாழ்ப்பாணத்தில் மினிசினிமா உரிமையாளர்களை உள்ளடக்கிய கூட்டமொன்றையும் நடத்தப்போவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


### தேவை

பெருந்தொகையான நெல்லிக் கனி தேவை.
விலை விபரங்களுடன் மாதிரியுடனும்
நேரில் தொடர்புகொள்ளுங்கள்.
பணிப்பாளர்,
அருள் ஆச்சிரமம்,
இல. 5, கோவில் வீதி (Temple Road),
யாழ்நகர் தொலைபேசி: 24081
[A-1155]



### முக்கிய அறிவித்தல்

வட பிராந்திய லொறி போக்குவரத்து சங்கத்தின் பொதுக்கூட்டம் 19-8-86 இன்று காலை 9 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்கவும்.

தலைவர்,
வட பிராந்திய
லொறி போக்குவரத்து சங்கம்.
[C-4158]



### முக்கிய அறிவித்தல்

வடமாகாண பெற்றோலியக் கூட்டுத்தாபன
விற்பனையாளர் முகவர்கள் சங்கம்

மேற்படி நிர்வாகசபைக் கூட்டம் 20-8-1986 காலை 10-30 மணியளவில் இல. 207, பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள சைனிஸ் ரெஸ்ரோறண்டில் நடைபெறவுள்ளது. எனவே நிர்வாகசபை அங்கத்தவர்கள் யாவரையும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வடமாகாண
பெற்றோலிய கூட்டுத்தாபன
விற்பனையாளர் முகவர்கள் சங்கம்.
[C 4150]



### பிரயாண ஒழுங்குகள்

★ அவுஸ்திரேலியா ★ டென்மார்க்

எவ்வித இடையூறுமின்றி நேரடிப்பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். சவுதி, ஈராக், குவைத் ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் எவ்வித இடையூறுமின்றி குறித்த விலாசத்திற்கு அழைத்துச் செல்வார். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் (Colombo to Frankfrt) நேரடிப் பிரயாண வசதிகளும் செய்துகொடுக்கப்படும். மற்றும் பாஸ்போட், பொன்ட். ரிக்கற்.

AIR PEOPLES
(Hotel Gnanams)
CLOCK TOWER ROAD, JAFFNA.
(C-4153)


## விவசாய ஆய்வு கருத்தரங்கு

வட்டுக்கோட்டை, திங்கள்

விவசாய ஆய்வுக் கருத்தரங்கொன்று எதிர்வரும் புதன் கிழமை காலை மன்றத் தலைவர் திரு பொ. செல்வரெத்தினம் தலைமையில் அளவெட்டி தெற்கு மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ம. சிறிமுருகவேளின் வரவேற்புரையைத் தொடர்ந்து சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா, யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர் திரு ச. கிருஷ்ணபிள்ளை, கமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. சபரமலிங்கம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளனர். [எ]

## வல்வையில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வழியால் வந்த சுந்தரராஜன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். பின் தலையைத் துளைத்த துப்பாக்கி ரவை வாய்க்கு அருகாகத் தாடை வழியே வெளியேறியுள்ளது.

பின்னால் வந்த சின்னவன் படுகாயமடைந்தார். இவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இறந்த சுந்தரராஜனின் உடலை அவ்விடத்திலிருந்து எடுக்கமுடியாதவாறு முகாமிலிருந்து தொடர்ச்சியாக அப்பகுதிகளில் 'ஷெல்' விழுந்து வெடித்தது. பின்னர் விடுதலைப் புலிகளின் பலத்த பாதுகாப்பின் மத்தியில் சடலம் ஒருவாறு அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுப் பெற்றோர், மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இறந்த சுந்தரராஜன் ஓர் கப்பல் மாலுமியாவார். இவர் வெளிநாட்டுக் கப்பலுக்குச் செல்வதற்காக அழைப்புவந்து நாளை கொழும்பு செல்வதற்காகக் கோவிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு வரும் வழியிலேயே இப்பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றது.

இம்மாதிரியாகக் கடந்த இரு வாரங்களில் இராணுவத்தினரால் சுடப்பட்டுப் பொதுமக்கள் நால்வர் இறந்தும், சுமார் பத்திற்குமதிகமானோர் படுகாயமடைந்துமுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. [க]

## மூவருக்கு மரண தண்டனை

(மட்டக்களப்பு நிருபர்)

கல்முனையில் நடைபெற்ற முதற் கொலைச் சம்பவத்திற்குக் காரணமாகவிருந்த மூவருக்கு 'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்' (புளொட்) நேற்று மரண தண்டனை வழங்கியுள்ளது.

கல்முனை ஆஸ்பத்திரிக்கு முன்னால் சம்பந்தப்பட்ட மூவரும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் நேற்றுக்காலை இறந்து கிடக்கக் காணப்பட்டனர்.

இது இவ்வாறிருக்க கல்முனைப் பகுதியில் இப்பொழுது நிலைமை சீரடைந்து வருகிறது. ஒரு வாரத்திற்குப் பின்னர் நேற்றுக் கடைகள் திறந்து வியாபாரம் நடைபெற்றது. [மா]

## யாழ் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட கூட்டம் நாளை புதன்கிழமை நண்பகல் யாழ் சட்ட நூலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப்பகுதியில் உறுதிகள் முழுதும் விடயமாக அங்கத்தவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற கடிதம் சம்பந்தப்பட்ட அனைவருடனும் ஆலோசித்தல் இக்கூட்டத்தில் முக்கிய இடம்பெறவுள்ளது. (மா)

## சனசமூக நிலைய புதிய கட்டிடம்

வேலணை திங்கள்

புங்குடுதீவு புனித சவேரியார் சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடமொன்றை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### சுமூகமாக ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்ததாக திரு டிக்ஸிற் தெரிவித்துள்ளார். திரு டிக்ஸிற் தமது தகவலில் இப் பேச்சுக்கள் சுமுகமான முறையில் நடைபெற்றதாகவும் இருதரப்பினரும் நடைமுறை நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பேச்சுக்களில் ஈடுபட்டதாகவும் தெரிவித்ததாக மேலும் கூறினார்.

### சுவிஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வரவிருந்த சுவிஸ் தொலைக்காட்சிக்குழு நேற்றுக் காலை இலங்கை வந்து சேர்ந்துள்ளது.

இக்குழுவினர் இப்பொழுது கண்டிக்குச் சென்றுள்ளனர். நாளை புதன்கிழமை கொழும்பு திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்குழுவில் படப்பிடிப்பாளர் ஒருவரும் செய்தியாளர் ஒருவரும் அடங்குவர்.

### விசேட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாசன், தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்புப் பிரமுகர் திரு ஜோசப் ஆகியோரே வந்தவர்களாவர்.

கொழும்பிலிருந்து விசேட விமானமொன்றின் மூலம் சீனன்குடா விமானநிலையத்தை வந்தடைந்த இவர்கள், அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் திருமலைத் துறைமுகக் கடற்படைத் தளத்தைச் சென்றடைந்தனர். பின்பு அங்கிருந்து பலத்த பாதுகாப்புடன் பகல் பதினொரு மணியளவில் வாகனம்மூலம் வந்து மரணச் சடங்கில் கலந்துகொண்டனர்.

திருமலை இந்து மயானத்தில் இறுதிச் சடங்குகள் முடிவடைந்த பின்பு பிற்பகல் இரண்டு மணியளவில் அங்கிருந்து கொழும்பு திரும்பினர். இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் கண்கள் கலங்கிய நிலையில் கூட்டணிப் பிரமுகர்களை வழியனுப்பி வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# பசுவதையும் மாமிச....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னு சென்று ஓடிய போது சிரித்தேனே! நான் மட்டும் என் சௌகரியத்திற்காக உயிர்களைக் கொல்லவில்லையா? அந்த மாட்டுக்காரன் அவன் வயிற்றை வளர்ப்பதற்காகத் தானே மாடுகளை தனக்குத் தெரிந்தவிதத்தில் கொல்கிறன்

''யோசிக்க யோசிக்க என் வைராக்கியம் கொஞ்சம் கொஞ்சமாய் கரைவது எனக்கே புரிந்தது.''

இந்த மனமாற்றத்திற்கு அநுசரணையாக அந்த அம்மா செல்லிய இரு காரணங்கள்!-

### ஸ்மசான வைராக்கியம்

''வேண்டியவரை சுடுகாட்டில் வைக்கும் போது 'சீ என்ன வாழ்க்கை இனி தாமரை இலைத்தண்ணீராக வாழ்வேன்' என்று வைராக்கியம் எடுப்பார்களாம். உப்பும் தண்ணீரும் ஊற,ஊற நாட்கள் செல்லச் செல்ல வாழ்வின் ஆசாபாசங்களில் மனம் ஈடுபட வைராக்கியத்தையும் கோட்டை விடுவார்களாம்.''

### ப்ரசவ வைராக்கியம்

''ப்ரசவ வலிபடும் நேரத்தில் சே! இனி ஆயுசுக்கும் வேறு பிள்ளை வேண்டாம் என்று வைராக்கியம் கொள்வார்களாம். பிள்ளை பிறந்து வலி மறந்த உடனேயே அடுத்தது பெண் வேண்டும் என்று கணவனிடம் கேட்டு வைராக்கியத்தையும் கோட்டை விடுவார்களாம்.''

### இக்காரணங்கள் ஏற்க கூடியதாக இல்லை

இவை நொண்டி சமாதானம் அல்லாமல் வேறு என்ன? தம்மை கடித்து துன்புறுத்தும் கொசுக்களையும் எறும்புகளையும் கொல்வதற்கும் மாட்டையும் ஆட்டையும் மாமிசம் புசிப்பதற்காக சித்திரவதை செய்து கொல்லுவதற்கும் பொருத்தமே இல்லை, இல்லை!

மாடும், ஆடும் மனிதனின் உதவிக்கும் பயனுக்கும் படைக்கப்பட்ட ஜீவன்கள் ஆறு கொசுவும் எறும்பும் மனிதனை துன்புறுத்தும் நச்சு ஜெந்துக்கள் இவைகளை அழிப்பது பாவமா?

''துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்'' இறைவனின் தொழிலாச்சே! மாட்டை அழிப்பதற்கு அது எமக்கு ஒரு துஷ்டமும் செய்ய வில்லையே!

'அ...ம்...மா..., என்று அலற ஆருயிரைக் கொன்று அருந்தி இம் மானிடரெல்லாம் இன்புற்றிருக்கிறர் ''அ...ம்...மா'' என்ற அலறல் கேட்டவர்கே நரகமென்றுல் புசித்தவற்கு எப்படியோ'' என்ற எச்சரிக்கை இளையன் முத்துகுமாருவின் - இலக்கணசுவாமிகள் ஏழை மனத்தை தாக்கியது வியப்பில்லை.

### மாவின் மகிமையும் பெருமையும்

இந்துக்களாகிய நாம் பசுவுக்கு அவை அளிக்கும் பயன்களால் மிக முக்கியத்துவம் கொடுக்கிறோம் மாக்கள் பேச்சுவல்லமையற்ற பிராணிகள், தங்கள் துன்பத்தை வெளிப்படுத்த அ...ம்...மா வென்று அலறுவதை விட வேறு வல்லமை அற்றவை இவைக்கும் நியாய ரீதியான உணர்ச்சி உண்டு. தத்துவ ஞானி Jeremy Bentham செல்லியிருக்கிறர் ''The question is not, can they reason? nor can they talk, but, can they suffer''?

### பிரதோஷம்

பிரதோஷ தினத்தன்று மாலை 4-30—6-30 மஞ்சள் வெயில் காயும் வேளை பிரதோஷ காலம். பாவத்தை போக்கக் கூடிய அவ்வேளையில் நந்தியின் இரு கொம்புகளுக்கூடாக சிவலிங்கத்தை தரிசிப்பதால் முற்பிறவிகளிலும் இளமையிலும் செய்த பாவங்கள் நீங்கி பெருவாழ்வும் மோட்சமும் கிட்டுமாம். பிரதோஷ காலத்தில் நந்திக்கு பூசையாகிய பின்தான் சிவலிங்கத்துக்கு பூசை. நந்தியம்பெருமானுக்குள்ள பெருமதிப்பை அப்பூசை நமக்கு உணர்த்துகிறது.

யேல் விபரித்த சிறுகதையில் இரும்பு உலக்கையால் மாட்டின் கொம்புக்கிடையில் மநறிப் பொட்டில் ஓங்கி அடித்து அதன் மாமிசத்துக்காக சித்திரவதை செய்து பாபமூட்டையை கட்டுகிறர்கள் ஆனல் பிரதோஷ காலத்தில் இரு கொப்புகளின் ஊடாக சிவனை தரிசித்து மோட்சம் அடையலாமென்பது அனேகருக்கு தெரியாது. இளவல் முத்துகுமாருவின் 14 வயசிலேயே உதித்த ஜீவாருண்ணிய நபண்பை போற்றி பின்பற்றினல் நற்கதி உண்டு.




அண்மையில் தமிழீழ மாணவர் பேரவையினல் [ரெஸோ] ஆரம்பிக்கப்பட்ட முதலுதவிச் சிகிச்சைப் பிரிவுக்காகப் பயன்படுத்தப்படும் 'அம்புலன்ஸ்' வாகனம்.

## "உள்ளூர் விதை கிழங்கு இம்முறை கிடைக்கும்"

(பண்டத்தரிப்பு)

விதை உருளைக்கிழங்கைப் பெறவிரும்பும் தொல்புரம் கமநலச்சேவை நிலையப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் இதற்கான தங்கள் விண்ணப்பங்களை எழுத்துமூலம் தத்தமது பிரிவு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் ஊடாக இம்மாதம் 31-ம் திகதிக்குமுன்னர் அனுப்பிவைக்கவேண்டும் என்று தொல்புரம் கமநலச்சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பி சூசைப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் நுவரெலியாவில் உற்பத்திசெய்யப்பட்ட உள்ளூர் விதை உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுமென்றும் சம்பந்தப்பட்ட விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கை நுவரெலியாவிலிருந்து தமது சொந்தப் பொறுப்பில் எடுக்கொண்டு வரவேண்டுமென்றும் திரு. சூசைப்பிள்ளை தெரிவித்தார்.

[வா-இ]

## 'வைத்தியர்கள் ஒன்றிணைந்து சேவையாற்றவேண்டும்'

கிளிநொச்சி, திங்கள்

''தமிழ் மக்களுக்கு அரசால் வழங்கப்படும வைத்திய உதவிகள் மறுக்கப்படுகின்றன அரச ஆஸ்பத்திரிகளில் மருந்துத்தட்டுப்பாடு உபகரணத் தட்டுப்பாடு முதலானவை நிலவுகின்றன. இந்த நிலையில தமிழ் மக்கள் உரிய மருத்துவ வசதிகள் இன்றி பெருந் துன்பப்படுகின்றனர். இதிலிருந்து எமது மக்களைக் காப்பாற்ற வைத்திய சேவையாற்றும் அனைவரும் ஒன்றிணைந்து சேவையாற்ற வேண்டும்''

''இவ்வாறு சாவகச்சேரி குறிம்பக கலலூரியில் நடைபெற்ற தென்மராட்சிப் பகுதி மருத்துவக்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றுகையில டாக்டர் கருணனந்தம் கூறினர்.

இவ் மருந்துக்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு டாக்டர். பொ சண்முகராசா தலைமை வகித்தார்.

டாக்டர் சின்னப்பு பேசுகையில்: ஆயுர்வேதவைத்தியர்களும் ஆங்கில வைத்தியர்களும் ஒன்றிணைந்து ஒருங்கிணைப்புசேவை ஒன்றை உருவாக்கி வைத்திய வசதிகளை மக்களுக்கு வழங்கவேண்டும்'' என்றுர்.

டாக்டர் கே. வி கே. திருலோகமூர்த்தி டாக்டர் பே. பிலிப், டாக்டர் ரீ. சிங்கராசா உட்பட பலரும் உரையாற்றினர்கள்.

## புதிய அரசஅதிபர்கள்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் திரு. பொன்னம்பலம் நியமனம் பெறுகிறுர். முல்லைத்தீவு அரசாங்க அதிபராக இருந்த ஜெகா: செந்தில் நாதன் கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(இ)

## மகனின் செயலால் தந்தை தற்கொலை

கொழும்பு, திங்கள்.

2 வண்டில் மாடுகளையும் மகன் விற்றுவிட்டான் என்ற வேதனையில் மனமுடைந்த தந்தை நஞ்சருந்தி தற்கொலை புரிந்து கொண்டார்.

பிங்கிரிய டவள்ள என்னும் இடத்திலேயே மேற்படி சம்பவம் நிகழ்ந்தது டபிள்யூ. ஏ. ஜேமிஸ் சிங்க என்னும்விவசாயியே பலியானவராவார்.

விசாரணையின் போது திரு. ஜேமிஸ் ஒரு விவசாயி என்றும் அவரது குடும்ப வருமானமே இந்த இருவண்டில் மாடுகளில் தான் தங்கியிருந்ததென்றும், அவரது மகன் குடிப் பழக்கம் உடையவர் என்றும் அதற்காக இவற்றை விற்றதினல் ஏற்பட்ட வேதனையாலேயே தந்தை நஞ்சருந்தித் தற்கொலை புரிந்து கொண்டார் என்றும் தெரியவந்தது.

[எ]



# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கானகேள்விகள் யாழ்.அபி.சபையால் 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்பதாந் திகதி [09-09-1986] முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைகட்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடியதொகைக்கு கட்டிடவேலைகள் செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் ஆகிய ஏதாவது ஒரு திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாந் திகதி பி. ப. 2 00மணிவரை [05-09-1986] மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணமாக ரூபா ஐம்பதும் (ரூ 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா இருநூற்றி ஐம்பது [250/-] செலுத்தியதன்பேரில் கேள்விப்பத்திரங்கள் யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்தில் [கச்சேரி] வழங்கப்படும். கேள்விப்பத்திரப்பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன காசுக்கட்டளையாகவோ அல்லது வங்கிக் கட்டளையாகவோ செலுத்தப்பட வேண்டும்.

கேள்விகள் 1986ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்பதாந் திகதி காலை 10-15 மணிக்கு யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்தில் அல்லது யாழ். கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்,
மாவட்டச்செயலாளரும், அரசாங்க அதிபரும்,
யாழ். மாவட்டம்,

யாழ். அபி. சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 1986-08-15.

| பாடசாலையின் பெயர் | விபரம் | பதிவுசெய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. யா/நாவலர் ம. வி. | மேல்மாடி படி 2 90' 9''X25' 0'' | 350, 000. 00 |
| 2. யா/மாதகல் சென். யோசப் வித்தியாலயம் | பாடசாலைக் கட்டிடம் 100' 0''X20' 0'' | 200, 000. 00 |
| 3. யா/மண்டைதீவு ம. வி. | விருந்தை விஸ்தரிப்பு 100' 0''X8' 0'' | 60, 000. 00 |

[A-1154]


## மூன்று மாதங்களின் பின் விடுதலை

வல்வெட்டித்துறை, திங்கள்

மூன்று மாதங்களின் முன்னர் கடற்படையினரால் கடலில் வைத்து மீன்பிடிப்படகு வலைகளுடன பிடித்துச் செல்லப்பட்ட பொலிகண்டியைச் சேர்ந்த நங்கி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த க தர்மகுலசிங்கம் கா. கணேசமூர்த்தி ஆகிய மூவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

வல்வைப் பிரஜைகள் குழுவைச் சேர்ந்தவர்களின் முயற்சியால் காணவில்லை என்று இருந்த இந்தக் கடற்றொழிலாளர்கள் பலாலி முகாமிலிருக்கும் தகவல் கிடைக்கப்பெற்று பலாலி முகாம் முப்படை இணைப்பு அதிகாரியை கடற்றொழிலாளர்களின் உறவினர்கள் சென்று விடுவிக்குமாறு கோரியதன் பேரில் இந்து மதகுரு ஒருவரைக் கூட்டிக்கொண்டு வரும்படி அதிகாரி பணித்ததினல் மதகுரு ஒருவர் இவர்களுடன் முகாமுக்குச் சென்று அவரது பொறுப்பில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். [எ]

## மகா கும்பாபிஷேகம்

உடுவில். சனி

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை காட்டுத்துறை அருள் மிகு அம்பலவாண ஸ்ரீ விநாயகர் கோவில் புனராவர்த்தன அஷ்டபத்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விழா விழா இம்மாதம் 24ம் திகதி காலை நடைதபலவுள்ளது..

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் பிரதேமகுரு பிரம்மஸ்ரீ நீ சச்சிதானந்தேஸ்வரக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்துவார்.

வியாகரண சிரோன்மணி பிரம்மஸ்ரீ தி கி சீதாராம சாஸ்த்திரிகள் யாழ் பல்கலைக் கழக இந்து நாகரீக துணைத் தலைவர் திரு ப. கோபால கிருஷ்ணன், திரு க நாகேஷ்வரன் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள். (இ)

## வீதித்தடை

கிளிநொச்சி, திங்கள்

பரந்தனுக்கும்- கரடிப்போக்குச் சந்திகருமிடையில் கண்டி வீதியில் கற்குவியல் போடப்பட்டு, அபாயம் எனக் குறிப்பிடப்பட்டு வீதித்தடை போடப்பட்டுள்ளது இதனல் கண்டிவீதி ஊடாகப்போகும் வாகனங்கள் பூங்காவனம் சந்தி ஊடாகச்செல்கின்றன.

# 60 பேருடன் சென்ற விமானத்தை கிளர்ச்சியாளர் சுட்டு வீழ்த்தினர்!

## சூடானில் இடம்பெற்ற கோரச்சம்பவம்

கார்ட்டும், ஆகஸ்ட் 18 சூடானில் தென் மாகாண தலைநகர் மலாகாரில் இருந்து அறுபது பயணிகளுடன் கார்ட்டுமிற்கு புறப்பட்ட உள்நாட்டு விமானச் சேவை விமானம் ஒன்றை சூடான் மக்கள் விடுதலை இராணுவ கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தியதில் அந்த விமானத்தில் பயணம் செய்த அறுபது பேரும் கொல்லப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து சூடானின் தென் பகுதி நோக்கிச் செல்லும் சகல விமானச் சேவைகளையும் சூடான் அதிகாரிகள் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

தென்பகுதியிலுள்ள போர் பிராந்தியத்திற்கு உணவு விநியோகத்தில் ஈடுபடும் எந்தவொரு விமானத்தையும் தாங்கள் சுட்டு வீழ்த்தப்போவதாக சூடான் மக்கள் விடுதலை இராணுவத்தின் கிளர்ச்சியாளர்கள் ஏற்கனவே எச்சரித்திருந்தார்கள்.

கடந்த சில வருடங்களாக கிளர்ச்சியில் ஈடுபட்டுவரும் சூடான் மக்கள் விடுதலை இராணுவம் ஏற்கனவே பல வன்செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற விமானத்தாக்குதலே சூடானில் நடைபெற்ற மிகப்பெரிய வன்செயலாகுமென்று அந்நாட்டு அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தெற்கு சூடானில் உள்ள இருபது லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இவ்விமானச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டதால் பட்டினியால் பாதிக்கப்படும் நிலையிலுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. [சி]

உலகச் செய்திகள்

## பிரான்ஸ் நுழையமுயன்ற 10 இலங்கையர் திருப்பப்பட்டனர்

பாரிஸ், ஞாயிறு மேற்கு ஜேர்மனியிலிருந்து இரு கார்களில் சட்டவிரோதமாக கிழக்கு பிரான்ஸினுள் நுழையமுயன்ற 10 இலங்கைப்பிரஜைகள் பிரெஞ்சுப் பொலிசாரினால் தடுக்கப்பட்டனர்.

இன்று காலை இச்சம்பவம் நடந்துள்ளது. இரு கார்களினதும் சாரதிகள் தவிர ஏனையோர் மேற்கு ஜேர்மனிக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இரு சாரதிகளும் பிரெஞ்சுப் பொலிசாரினால் விசாரணைக்கு உட்படுத்தப் படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. [ஊ]

## நிதி ஒதுக்கீடு

சென்னை, ஆகஸ்ட்

திருநெல்வேலி மாவட்டத்தில் நடப்பாண்டு ஆதி திராவிடர் மற்றும் மலை வாழ் பழங்குடி மக்கள் முன்னேற்ற அபிவிருத்திக்காக 4 லட்சம் ரூபாவை மாநில அரசு ஒதுக்கியுள்ளது.

மாநிலததில் பிற்படுத்தப் பட்டோருக்காக ஒருகோடியே ஒன்பது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. [சி]

## திருப்பரங்குன்றம் திருப்பணி வேலைகள்

சென்னை: ஆகஸ்ட்

திருப்பரங்குன்றம் அருள் மிகு சுப்ரமணிய சுவாமி கோவில் திருப்பணி சுமார் 25 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாலயத்தின் குடமுழுக்குவிழா அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது. மூலஸ்தானத்திற்கு மேலே வெள்ளியினாலான விதானம் 250 கிலோ வெள்ளியினால் அமைக்கப்படவுள்ளது.

## ஆந்திரா வெள்ளத்தில் இதுவரை 94 பேர் பலி

### 700 கிராமங்கள் பாதிப்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 18 ஆந்திராமாநிலத்தில்கடந்த சில நாட்களுக்குமுன் ஏற்பட்ட வெள்ளத்தினலான பாதிப்புகள் இன்னும் குறையவில்லை.

இதுவரை காலமும் இந்த மாநிலத்தில் ஏற்படாதவிதத் கடந்த சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட இந்த வெள்ளத்தில் இதுவரை 94 பேர் இறந்துள்ளனர், சுமார் 700 கிராமங்கள் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன மேலும் பாதிக்கப்பட்ட பகுதிகளுடனான சகல தகவல் தொடர்புகளும் பிற இடங்களிலிருந்து துண்டிக்கப்பட்டு விட்டன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மற்றும் மேற்கு கோதாவாரி மாவட்டங்களில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பல லட்சக்கணக்கான மக்கள் தற்போது அகதி முகாங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். சுமார் ஐம்பதினாயிரம் வீடுகள் சேதமாகியுள்ளன.

ஆற்றுக்கரை கட்டுகளில் ஏற்பட்டுள்ள உடைப்புகளினால் சுமார் ஒன்பது லட்சத்து அறுபதினாயிரம் ஹெக்டர் நிலப் பரப்பில் அறுவடைக்காக உள்ள பயிர்கள் நீரில் மூழ்கிப் போய் எங்குமே வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன.

ஆந்திரா மாநிலத்தில் சில பகுதிகளில் தேசிய மற்றும் மாநில போக்குவரத்துப் பாதைகள் பல நீரில் மூழ்கியதால் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

எனினும் சில பகுதிகளில் வெள்ள நீர் வடியத்தொடங்கியுள்ளது. திட்டக்கமிஷன் செயலாளர் திரு. பெய்யல் தலைமையிலான குழு ஒன்று பாதிக்கப்பட்ட பகுதிகளை விமான மூலம் சென்று பார்வையிட்டதுடன் இதற்கான நிவாரண உதவிகள் தொடர்பாக மாநில அரசு அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்துள்ளது.

நிலைமையை போர்க்கால அடிப்படையில் சமாளிக்குமாறு முதலமைச்சர் திரு என். டி. ராமராவ் மாவட்ட கலக்டர்களிடம் கேட்டுள்ளார். [சி]

## எம். ஜி. சக்கரபாணி காலமானார்

சென்னை, ஆக. 18 தமிழ் திரைப்பட நடிகரும் தயாரிப்பாளருமான திரு. எம். ஜி. சக்கரபாணி (வயது 76 நேற்றிரவு சென்னையில் தனியார் மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரனின் மூத்த சகோதரரான திரு சக்கரபாணி 50-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்திருபதுடன் பல படங்களை தயாரித்துமுள்ளார். (சி

## ஆயுள்வேத வைத்தியதுறைக்கு மூலிகைத் தோட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமையும்

### சித்தவைத்திய பீடாதிபதி உறுதி

சாவகச்சேரி, திங்கள். ''பழம் பெருமை வாய்ந்த சித்த ஆயுள்வேத வைத்தியத் துறையின் எதிர்கால வளர்ச்சிக்கு கைதடியில் அமையவிருக்கும் ஆயுள்வேத மூலிகைத் தோட்டம் ஒரு வரப்பிரசாதமாகும். இம் மூலிகைத் தோட்டத்தினை வெற்றிகரமாகச் செயற்படுத்தி இநத மண்ணுக்கும், எம் பிரதேசத்தில் இருக்கும் சித்த ஆயுள்வேத வைத்தியர்களுக்கும் நாம் சகல விதமான ஆதரவினையும் வழங்க ஆயத்தமாகவுள்ளோம்.''

இவ்வாறு யாழ் பல்கலைக் கழகத்தின் கைதடி சித்தவைத்திய பீடாதிபதி டாக்டர்எஸ் பவானி கைதடி சித்த வைத்திய பீடத்தில் கடந்த சனிக்கிழமை சர்வ தேச சமாதான சேவை இயக்கத்தினரால் நடாத்தப்பட்ட ஆயுள்வேத மூலிகைத் தோட்ட நிர்மாணக் கருத்தரங்கின் போது கருத்துரை நிகழ்த்துகையில் கூறினார்.

சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் தலைவர் திரு வீ எஸ். துரைராஜா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் ஆயுள்வேத வைத்தியர்கள், கைதடி ஆயுள்வேத வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி இந்திரா சத்தியநாதன், லயன்ஸ் கிளப், பனம் பொருள் அபிவிருத்திச் சபை மற்றும் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் யாவரும் பங்கு கொண்டனர்.

இக் கருத்தரங்கில் ஆயுள்வேத வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி இந்திரா சத்தியநாதன் கருத்துத் தெரிவிக்கையில் ''எம் பகுதியில் அமையவுள்ள ஆயுள்வேத மூலிகைத் தோட்டப் பணியில் ஆர்வமுள்ள அத்தனை பேரும் பங்காளர்களாக வரல் வேண்டும். எம்பகுதியில் மூலிகைத் தோட்டம் ஒன்று இல்லாமல் இருப்பதன் காரணமாக இங்கு தேவைப்படுகின்ற மூலிகைகளுக்கு நாம் எப்போதும் தென் பகுதியையே நம்பியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையை மாற்ற நாமே நமக்கென ஒரு மூலிகைத் தோட்டத்தினை மிக விரைவில் அமைத்துக் கொள்ளல் வேண்டும்'' என்றார்.

யாழ் செயலகத்திட்டமிடல் பகுதியின் உதவிப் பணிப்பாளர் திருமதி எஸ். கணேந்திரன் கருத்துரை வழங்கும் போது ''இவ் உத்தேச மூலிகைத் தோட்டத்தினை அமைப்பதற்குரிய திட்ட அறிக்கைகளைத் தயாரித்துக் கொள்ளல் அவசியம் எனவும் மூலிகைத் தோட்டத்தினை அமைக்க முன்பும் சிலர் முயற்சி எடுத்தனர் எனவும் ஆனல் அவ்வாறான முயற்சி நடைமுறைச் சாத்தியப்படாமல் போனமை வேதனைக்குரியது என்றும் இப்போது முனைப்பெடுத்தவர்கள் செயலூக்கமும், சேவை ஆர்வமும் உள்ளவர்களாதலால் இத்திட்டம் வெற்றியடையும் எனவும் தெரிவித்தார்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா பேசும் போது கைதடியில் அமையவுள்ள மூலிகைத் தோட்டத்திற்கு வேண்டிய உதவிகளையும், ஒத்தாசைகளையும் பனம் பொருள் அபிவிருத்திச்சபை வழங்கத் தயாராகவுள்ளதாகவும் இத் தோட்டத்திற்கு மிகவும் அததியாவசியமாகத் தேவையாயுள்ள கிணறு ஒன்றினைத் தாம் அமைத்துத் தருவதாகவும் தெரிவித்தார்.

ஆயுள்வேத டாக்டர்கள் கே. சுந்தரம், பே பிலிப்ஸ், எஸ் பாலச்சந்திரன், மருந்துக் கூட்டுத்தாபனப் பிரதிநிதி திரு எஸ் ஸ்ரீகாந்தன். தேசிய சேவை இளைஞர் மன்றத்தின் மாவட்ட அதிகாரி திரு. கே. கார்த்தி உட்பட வேறு பலரும் கருத்துரைகள் வழங்கினர்.

இக்கருத்தரங்கில் மூலிகைத் தோட்ட நிறைவேற்றுச் செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. இக்குழுவில்

(7-ம் பக்கம் பார்க்க)

## தெ. ப. உ. வி. கூ.சங்கம்: "குறுகியகாலவளர்ச்சி முன்மாதிரியாக திகழ்கிறது"

முல்லைத்தீவு, திங். 'யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை 50 வருஷங்களுக்கு மேலாக முன்னேற்றமடையவில்லை; ஆனல் கூட்டுறவுத்துறையில் வடமாகாண தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் குறுகிய காலத்தில் அடைந்துள்ள வளர்ச்சி முன்மாதிரியாகத் திகழ்கிறது இவ்வளர்ச்சிக்கு சகல வகையிலும் உதவி வரும் ஸ்தாபனங்கள் பாராட்டுக்குரியவை.'

இவ்வாறு இலங்கை பனை அபிவிருத்திச்சபைத் தலைவரும் வட மாகாண தெ. ப. உ. வி கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ செயலாளருமான திரு. க. நடராஜா பேசுகையில் தெரிவித்துள்ளார்.

கடந்த ல தினங்களாக பனை அபிவிருத்திசபைத் தலைவர் திரு நடராசா முல்லைத்தீவுக்கு விஜயம் செய்து அங்குள்ள பனை வளங்களையும், பனம் பொருள் உற்பத்திகைத் தொழில்களுக்கான புதிய திட்டங்களையும் பார்வையிட்டார். அத்துடன் தெ. ப. உ. வி. கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளையும் சந்தித்து உரையாடினார்.

புதுக்குடியிருப்பு தெ. ப. உ வி கூட்டுறவுச் சங்கத்தில் திரு. நடராசா பேசுகையில், முல்லைத்தீவு மாவட்டம் பனை அபிவிருத்திப் பணியில் முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க, தற்போது அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டுள்ளது என்று பாராட்டினார். (மா)

## கெய்ரோவில் நடைபெறும் நிதியமைச்சர்கள் மகாநாடு

கெய்ரோ, ஆகஸ்ட் 18 அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சுமார் 120க்கும் அதிகமான நாடுகளின் நிதி அமைச்சர்களும், வெளிநாட்டமைச்சர்களும் பொருளாதார, வர்த்தக ஒத்துழைப்புக்கான திட்டமொன்றை வகுப்பதற்கான மாநாடு ஒன்று கெய்ரோவில் ஆரம்பமாகிறது

கைத்தொழில் நாடுகளுடனான உறவுகள் மூலப்பொருட்களின் விலை வீழ்ச்சி, ஏற்றுமதிச் சம்பாத்திய வீழ்ச்சியால் அதிகரித்துள்ள கடன் பிரச்னை ஆகிய விடயங்கள் குறித்து இந்த மாநாட்டில் முக்கியமாகப் பரிசீலிக்கப்படும்

இதேவேளையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்புக் குறைந்துவருவதாக 77 நாடுகளின் குழுவின் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

செய்ரோவில் இன்று நடைபெறும் மாநாட்டில் ஆராய்வதற்கென தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய காலம் வந்துவிட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். [சி]

அபிவிருத்தி நிதியம்

திட்டமிட்ட சேமிப்பு
வாழ்வை வளமாக்கும்

* ஆலோசனை
* வசதியான திட்டங்கள்
* வழிகாட்டல்

அனைத்தையும் வழங்குவது

"அபிவிருத்தி நிதியம்"
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் சேமிப்பை பிரதேச அபிவிருத்திக்கான முதலீடாக மாற்றுவதற்கு உதவும் நிறுவனம்.
[A-1063]

வெளிநாட்டு
பிரயாண ஒழுங்குகள்

★ ஈராக்:- (ஆஸ்பத்திரி கிளீனேஸ்)
(ஈராக்குக்கு ஒருமாதத்துக்குள் பயணம் செய்யலாம்.)
★ லிபியா: (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
* சவூதி அரேபியா: (ஆஸ்பத்திரி, விமான நிலைய கிளீனேஸ்)
* லெபனன்: (லேபறேஸ்)
* குவைத்: (கிளீனேஸ்)
* குவைத்: (வீட்டுப் பணிப் பெண்கள்)
* சிங்கப்பூர்: (வீட்டுப் பணிப்பெண்கள்)

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குச்செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 7 படம் மற்றும் ஆவணங்களுடன் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன் ஒழுங்கையால வரவும். C 4145

பிரயாண ஒழுங்குகள்

* கனடா
* டென்மார்க்
* ஜேர்மனி
* சவூதி அரேபியா

எமது பயணங்கள் வெற்றிகரமான முறையில் நடைபெறுகின்றன.

★ கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி உடன் அழைத்துச் செல்வார்.
★ ஜேர்மன் நாட்டிற்கு செல்ல விரும்புவோருக்கு பயண ஒழுங்குகள் மிக விரைவில் செய்து தரப்படும்.
★ சவூதி அரேபியாவுக்கு வீதித் திருத்தம், விவசாய தொழிலாளர், மேசன், தச்சு வேலைகட்கு செல்ல விரும்புவோர் உடன் பாஸ்போர்ட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.
★ கனடா, டென்மார்க், ஜேர்மனிக்கு இவ்வாரப் பயணம் செய்ய பதிவு செய்தவர்களும், செல்ல விரும்புவோர்களும் 21ம் திகதிக்கு முன் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போர்ட், பொன்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

தொடர்பு:
N. BALA

பஸ்வழி இலக்கம்: 764, பலாலி வீதி, கோண்டாவில்.
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
(C 4129)

## "கற்புக்கனல்" நூல் வெளியீடு

புங்குடுதீவு, திங்கள்

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம் எழுதிய "கற்புக்கனல்" என்னும் சிறுவர் காவியம் மேற்படி வித்தியாலய மண்டபத்தில் சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஆசிரியமணி சி. க. நாகலிங்கம் இவ் வெளியீட்டு வைபவத்திற்கு தலைமை தாங்கியதுடன் நூலை வெளியிட்டு வைத்தார்.

திரு. தி ஜெயராசா நூலின் முதற் பிரதியைப் பெற்றார். நூலாசிரியர் திரு. த. துரைசிங்கம் உட்படப் பலர் இவ் வைபவத்தில் உரையாற்றினர். [சி]

## மூலிகை....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு வீ.எஸ் துரைராஜா, டாக்டர் எஸ். பவானி டாக்டர் திருமதி இந்திரா சத்தியநாதன் டாக்டர் வி சின்னப்பு திரு வீ ஜீ தங்கவேல், திரு கே கார்த்தி, திருமதி எஸ். கணேந்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இக்குழுவின் செயலாளராக திரு க ஜீவகதாஸ் தெரிவுசெய்யப்பட்டார். [இ]

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி; 3 (1986 8-19)
திதி: பூரணை பி இ வரை
நட்சத்திரம்: திருவோணம் காலை 9 30ன் பேல் அவிட்டம்

மேடம்: வாழ்க்கை இன்று புதிதாகத் தோன்றும். ஆசாரக் குறைவுக்கு இடமுண்டு வீணான கவலைகளுக்கும் இடமுண்டு.

இடபம்; அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பீர்கள். சமயோசித நடவடிக்கை மூலம் எதையும் சமாளித்துக் கொள்வீர்கள்

மிதுனம்: உறவாடிக் கெடுப்பதற்கு பகைவர்கள் வருவர். உற்சாகம் குன்றும் சிலருக்கு உஷ்ண சம்பந்தமான நோயு மேற்படலாம்

கடகம்: குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும் எதிர்பார்த்த சுபகாரியமான்றுக்கு வழி கோலப்படும். சுப தினம்.

சிங்கம்: செய் தொழிலில் சிரமம் தோன்றும். உடல் நலக் குறைவும் உண்டு நண்பர் ஒருவர் மூலம் கவலைக்கும் இடமுண்டு

கன்னி: மனம்போல் வாழ்வு இன்று மலரும். தொழிற் துறையாலும் நன்மையுண்டு பிதா வழிச் சுகமும் உண்டு

துலாம்: ஆராய்ச்சியாளர்களுக்கு உகந்த தினம். தாராள சிந்தை மேலிடும். தொழில் முயற்சியும் உண்டு.

விருச்சிகம்: குடும்ப வாழ்க்கை இனிமை நிறைந்ததாக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும் கிடடும். சந்தோஷமான தினம்.

தனுசு: பண முடையினால் பெரிதும் வேதனைப் படுவீர்கள். மனப் போராட்டங்களும் அதிகரிக்கும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

மகரம்: இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர். சுபகாரியம் ஒன்றும் இடம் பெறலாம். கல்வி முன்னேற்றமுண்டு.

கும்பம்: வாழ்க்கையில் வசதிகள் பெருகும். பொதுப் பணிகளில் நாட்டம், தொழிற் சிறப்பு இவற்றுடன் பெரியோர் ஆதரவுமுண்டு.

மீனம்: அக்கினி, ஆயுத பீடைக்கும் இடம் உண்டு அன்னியரின் சகவாசம் சங்கடத்தில் மாட்டி வைக்கும். அவதானம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## நானிலமும் ஆட்சிசெயும் நாயகியே அம்மா

சுத்தும் கடல் மீதினிலே
நித்தம் உன தாட்சி
காணவரும் பக்தர்களும்
கண்டிடுவர் மாட்சி
மோன வடிவான பரன்
மாதரசி நீயே
நானிலமும் ஆட்சி செயும்
நாயகியே அம்மா

சக்தியெனப் போற்றி நிதம்
பக்தி செய்கு வார்கள்
புத்தியென வந்துறையும்
வித்தகியும் நீயே
எத்திசையும் வீற்றிருக்கும்
ஏக வடிவாளே
முத்திபெற வேண்டுகிறோம்
சித்தியருள் வாயே

கையிலயங்கிரி சிவன் உன்
கைக்குள் அடக்கம்
காலங்கள் மூன்றும் உன்
கண் சொல் விளக்கம்
பயிலுகின்ற வித்தைகளும்
பாவையுன தாட்டம்
பைந்தமிழர் நாயகியே
பைங்கொடியே அம்மா

நயினையம் பதி மீது
நயந்து உறைகின்றாய்
நாவலர் பாவலர்
நாவில் உறைகின்றாய்
ஒளியாகிக் காற்றாகி
ஓசையெலாமாகி
ஒன்றாகிப் பலவாகி
உள்ள வளும் நீயே

—வ. யோகானந்தசிவம்

★ ★ ★ ★

★ இன்று நயினை நாகபூஷணி தீர்த்ததிருவிழா

## மாகியம்பதி அம்மை துதி

கலையாய அறுபத்து நான்கினையும்
பீடமுயர் சக்தியே கங்காதரன்பாகியே
கணநாதன் கார்த்திகை மைந்தனை பெற்றளென்
கற்பகத்தருளின் ஒளியே

நிலையான பேரின் நித்தியானந்த பொருளே
கையிருள் கொண்டுலல்பாவி என் இருவினை
நீக்கி ஆண்டருளும் அம்மா

மலையரசன் மகளே மணிவண்ணன் தங்கையே
மங்காத செல்வி உலகெலாம் தாயாக்கிவாழ்
வளிக்க வந்த உமையே

தலையாய ஈழத்தில் தங்கி உறை மகாமாரியே
தத்துவப் பெருங்கருணை மழைபொழியும்
அம்மையே மீனாட்சி உமையே.

—சிவராஜா மில்க்வைற்

★ ★ ★ ★

★ சண்டிலிப்பாய் மாகியப்பதி
ஸ்ரீமீனாட்சிஅம்மன் தீர்த்தத்திருவிழா இன்று

## கந்தா! மனிதவதையை மாற்றிடுவாய்

மறையதனின் மறையதனை மலைமுனிக்கு
மகிழ்வோடு தெரிவித்து வானவர்கள்
குறையதனை நிறைவாக்கிக் கூர்வேல்கொண்டு
கொடும் அசுரர்குலம்மாய்த்த குமரவேளே!

அறம்துறந்து மனிதவதை நடக்குதையா
அதனை நீ மயிலேறித் தீர்க்கவேண்டும்
உறைநல்லூர் தனில்மேவும் உமையின்மைந்தா!
உனதருளைத் தந்தெமையாள் முருகவேளே!

—பண்டிதர் முருகேசனார்

★ இன்று நீர்வை முருகன் மஞ்சத்திருவிழா

## வயோதிபர்மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், செவ்.

நயினாதீவில் ஆயுதப்படையினர் பொதுமக்களைத் தாக்கும் சம்பவம் தினசரி நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலினால் நோய் வாய்ப்பட்ட ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப் பட்டுள்ளார்.

நயினாதீவைச் சேர்ந்தவர்களே ஆயுதப்படையினரின் தாக்குதலுக்கிலக்காவதாகக் கூறப்படுகிறது.

இவ்விதமாகத் தொடரும் தாக்குதல் சம்பவங்களால் நயினாதீவு மக்கள் மத்தியில் அச்சம் தோன்றியுள்ளது. [மா]

## பிணை நின்றவர்களிடம் கடனை மீளப்பெற நடவடிக்கை

வேலணை, திங்கள்

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவினைச் சேர்ந்த வேலணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி மண்கும்பான், புங்குடுதீவு நயினாதீவு போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள் பத்து லட்சம் வீடமைக்கும் திட்டத்தின் கீழ் வீடுகளை அமைப்பதற்கு பெற்ற கடன்களை இதுவரை மீளச் செலுத்தாமல் விட்டவர்களுக்கு பொறுப்பாக பிணை நின்றவர்களிடமிருந்து மேற்படி முழுப் பணத்தையும் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றன. [இ]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 19-8-86

யாழ். நகரிலுள்ள

# வர்த்தக நிறுவனங்களுக்காக பாதுகாப்புசேவைஆரம்பிக்கப்படும்!

யாழ்ப்பாணம், செவ்.

யாழ் நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்களுக்கான பாதுகாப்புச் சேவையொன்றை செப்டம்பர் முதலாம் திகதி முதல் யாழ் வர்த்தகச் சங்கம் ஆரம்பிக்கவிருக்கிறது.

யாழ் வர்த்தக நிலையங்களில் நடைபெறும் கொள்ளைகளையும், திருட்டுக்களையும் தடுப்பதற்கும், 'ஷெல்' தாக்குதல்களினால் பாதிக்கப்படும் வர்த்தக நிலையங்களுக்கு உடனடியாக உதவியளிப்பதற்காகவும் இந்த பாதுகாப்பு சேவைஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். வர்த்தக சங்க செயலாளர் திரு. எஸ். நமசிவாயம் தெரிவித்தார்.

தீப்பிடிக்கும் வர்த்தக நிலையங்கள் பற்றி உடனடியாக யாழ். மாநகரசபையின் தீயணைக்கும் படையினருடன் தொடர்புகொண்டு தீயை அணைப்பதற்கும் பாதுகாப்பு சேவை ஊழியர்கள் உதவுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

சத்திரத்து சந்தியிலிருந்து யாழ். மனோகரா சந்திவரையும், அங்கிருந்து வின்சர் சந்திவரையும், அங்கிருந்து ஆரியகுளம் சந்திவரையும், அங்கிருந்து வேம்படி சந்திவரையும், அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி ஊடாக சத்திரத்து சந்திவரையும், பாதுகாப்பு சேவை ஊழியரின் ரோந்து நடைபெறும்.

தினமும் மாலை 6 மணிமுதல் காலை 6 மணி வரை இச்சேவை நடைபெறும். பாதுகாப்பு சேவைஊழியர்கள் சைக்கிளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். பாதுகாப்பு சேவைக்கு விண்ணப்பித்த 23 பேரில் 15 பேர் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சீருடை வழங்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## 'வர்த்தகன்' வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்

யாழ். வர்த்தக சங்கத்தின் 'வர்த்தகன்' என்ற மாதாந்த இதழ் வெளியீட்டுவிழா இன்று காலை சங்க காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. சங்கத் தலைவர் திரு ஏ கே. நடராசா தலைமையில் இவ்விழா நடைபெறும். [க]

தீவுப்பகுதியில்

## பீரங்கி, ஷெல் தாக்குதல்; மக்கள் வெளியேற்றம்

வேலணை, திங்கள்

ஊர்காவற்றுறைப்பகுதியையும், காரைநகர் பகுதியையும் நோக்கிகாரைநகர்கடற்பிராந்தியத்திலிருந்து இன்று பீரங்கி வேட்டுக்களும், ஷெல் தாக்குதல்களும் பல மணிநேரம் தொடர்ந்து நடந்தன.

இப் பீரங்கி, 'ஷெல்' தாக்குதல்கள் பலமாதங்களுக்குப் பின் காரைநகர் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டன.

இச்சம்பவத்தினால் ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள மக்கள் பீதியடைந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்கின்றனர்.

தொடர்ந்துதாக்குதல் நடைபெற்றுவருவதினால் அசம்பாவிதங்கள்பற்றி இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவில்லை. [எ]

வல்வை கடற்றொழிலாளர்

## பிரச்னை குறித்து 'லலித்'துக்குமகஜர்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறைப் பகுதியில் கடற்றொழிலாளர் படும் கஷ்டங்கள் தொடர்பான மகஜர் ஒன்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அம்மகஜரில் கடல்வலயச் சட்டத்தால் கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்னைகள், அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் வாழ்க்கைப் பிரச்னைகள் சம்பந்தமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன். இதிலிருந்து இத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (இ)

## சட்டவிரோத மின்பாவனையை நிறுத்துமாறு வேண்டுகோள்

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்டிருக்கும் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரப் பாவிப்பவர்களை உடனடியாக தமது மின் விநியோகத்தினைத் தாமாகவே நிறுத்திக்கொள்ளும்படி சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திரு த. நவரத்தினராசா அவசரவேண்டுகோள்ஒன்றினை விடுத்துள்ளார்.

செயலாளர் தமது வேண்டுகோளில் தெரிவித்திருப்பதாவது; நகரசபை எல்லைக்குட்பட்டிருக்கும் பிரதேசத்தில் சட்டவிரோதமாகப் பாவிப்பவர்களது மின் கட்டணத்தினை நகரசபையே இலங்கை மின்சார சபைக்குச் செலுத்திக்கொண்டிருப்பதால் எமது சபை நஷ்டத்தினை நோக்கிச் செல்கின்றது.

ஆதலால் தமது வீடுகளுக்கு மின்சாரம் பெறவிரும்புபவர்கள் உடனடியாகத் தமது விண்ணப்பங்களைச் சபைக்கு சமர்ப்பித்தால் அவை உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டுமின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் சபை மேற்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126.

## சுகாதாரப் பரிசோதகரின் பணிப்புரை

பண்டத்தரிப்பு, திங்கள்

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள தேநீர்க் கடைகள், ஹோட்டல்கள் மற்றும் உணவுசாலைகளை மிகவும் சுத்தமாகவும், துப்பரவாகவும் வைத்திருக்குமாறு பண்டத்தரிப்பு பொதுசுகாதாரப் பரிசோதகர் திரு பொ. பேரின்பநாதன் பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேற்படி தேநீர்க்கடைகள், ஹோட்டல்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவற்றில் சுத்தம்பேணப்படுவதுஅவசியம் என்றும் இதற்கு அமைவாக நடக்காதவர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். [எ]

## "நியூபவுண்லாந்து அகதிகள் மீள அனுப்பப்படமாட்டர்"

### கனடிய பிரதமர் உறுதி

ஒட்டாவா ஆகஸ்ட்

''நியூபவுண்லாந்து தீவை உயிர்காப்புப்படகுகளின் மூலம் அடைந்த 152 இலங்கைத் தமிழ் அகதிகளும் கனடாவிலிருந்து திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்'' என்று கனேடிய பிரதமமந்திரி திரு. பிறியன் மல்ரோனே திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

உயிர்காப்புப் படகுகளின் மூலம் கடலில் தத்தளித்து அகதிகளாகக் கனடாக் கரைப் பகுதியை வந்தடைந்த அகதிகளை மீண்டும் திருப்பி அனுப்பும் வழக்கம் கனடாவுக்கு இல்லை'' என்றும் கனேடியப் பிரதமர் மேலும்கூறியுள்ளார். [எ]

தபால்

## அத்தியட்சகரை சந்திக்கஏற்பாடு

ஊர்காவற்றுறை, திங்கள்

தீவுப்பகுதியில் தபால் முத்திரை தட்டுப்பாடு சம்பந்தமாக ஊர்காவற்றுறை பிரஜைகள்குழுவினர், வடமாநில தபால்அத்தியட்சகரை சந்திப்பதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்துவருகின்றார்கள். [எ]

## வாகனங்கள் முகாமுக்கு செல்ல வேண்டும்

வவுனியா, திங்கள்

மன்னார் பகுதியிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் சகல வாகனங்களும் மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் தங்கிச் செல்ல வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரயாணிகளுடன் புறப்படும் வாகனங்கள் தள்ளாடிச் சந்தியில் பிரயாணிகளை இறக்கிவிட்டு வாகனங்களுடன் சாரதி முகாமுக்குள் சென்று அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிமாவட்டங்களுக்கு செல்ல வேண்டுமாம்.

இந்த நடவடிக்கையால் பிரயாணிகள் பெரும் சிரமமடைவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது, [மா]

நயினையில்

## அம்மனின் ரதத்தை பெண்களும் இழுத்தனர்

வேலணை, திங்கள்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ரதோற்சவம் இன்று நடந்தபோது அம்மனின் ரதத்தை ஆண்களுடன் பெண்களும் சேர்ந்து இழுத்தனர்.

என்றுமே இல்லாத இச்சம்பவம் முதன்முதலாக நயினாதீவு நாகபூஷணி அம்மன் ரதோற்சவத்தின்போதே இடம்பெற்றது.

இவ்வருடம் நயினாதீவு நாகபூஷணி அம்மன்ஆலய ரதோற்சவத்திற்கு இளைஞர்கள் அவ்வளவாகச் சமுகந்தரவில்லை வயோதிபர்களும், பெண்களுமே அதிகளவில் வந்திருந்தனர் இந்நிலையில் ஆள் பற்றாக்குறையின் நிமித்தமே பெண்களும் அம்மனின் ரதத்தை இழுத்தனர். [இ]

நுவரெலியாவில் சிங்களவரை குடியமர்த்த

## 1,800 தொழிலாளர் வெளியேற்றம் தொழிற்சங்கங்கள் பலத்த கண்டனம்

[ஹற்றன் நிருபர்]

நுவரெலியாப் பகுதியில் உள்ள மகாஓயா அரசதோட்டத்தில் காலாதிகாலமாக வேலைசெய்துவந்த 1800 தமிழ் தொழிலாளர்களை வெளியேற்றிவிட்டு சிங்களவர்களைக் குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நடவடிக்கையைஎதிர்த்து இ. தொ. காங்கிரஸ், தொழிலாளர் தேசிய காங்கிரஸ், செங்கொடிச் சங்கம் லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியன பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த நடவடிக்கையை அரசாங்கம் நிறுத்தத் தவறினால் சகல தோட்டங்களிலும் பலத்த வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்போவதாகவும் சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

நுவரெலியாவில் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் நிகழ்ந்த மண்சரிவினால் அகதிகளான சிங்களவர்களே இத் தோட்டத்தில் குடியேற்றப்படவுள்ளனர்.

இவர்களைக் குடியேற்றுவதன்மூலம் 1800 தமிழ் தொழிலாளர்கள் அகதிகளாக்கப்படுகிறார்கள்.

தேயிலை உற்பத்தியில் பழமைவாய்ந்தது மகா ஓயாத் தோட்டம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [மா]

## உணவுமுத்திரை வழங்கல் துரிதம்

பண்டத்தரிப்பு, திங்கள்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவில் வறுமை நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுமார் 45 ஆயிரம் பேருக்கு உணவு முத்திரைகள் வழங்கும்வேலைகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியத்தின் ஏற்பாட்டின் பேரில் கிராமசேவை அலுவலர்கள், விசேஷ சேவை அலுவலர்கள் ஆகியோர் இந்த உணவு முத்திரைகளை வழங்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர். [எ]

யாழ். ஆஸ்பத்திரியில்———

## மருந்துவாங்க நின்றதாயின் தாலிக்கொடி மறைந்தது!

யாழ்ப்பாணம், செவ்வாய்

மருந்து வாங்குவதற்காக குழந்தையுடன் வந்த தாயின் ஆறு பவுண் தாலிக்கொடி மாயமாக மறைந்தது

இந்தசம்பவம் நேற்றுக் காலை யாழ் ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பகுதியில் உரும்பராயைச் சேர்ந்தசாந்தி என்ற பெண் மருந்துவாங்க கியூவில் நின்றபோது இடம் பெற்றுள்ளது.

கூடுதலான நோயாளிகள் நிரம்பிவழிய இப்பெண் கைக்குழந்தையுடன் கியூவில் நின்ற பொழுது தாலிக்கொடியை குழந்தை அறுத்துவிடவே அதனை எடுத்து அத்தாய் பாதுகாப்பாக தனது கைப்பைக்குள் வைத்ததாக கூறப்படுகிறது.

சிறிது நேரத்தின் பின்னர் மருந்தை பெற்றுக்கொண்டு வெளியில் வந்து தனது பையைப் பார்த்த பொழுதே தாலிக்கொடி திருட்டுபோயுள்ளது தெரியவந்தது.

அத்தாய்பலத்த கூச்சலிடவே, ஆஸ்பத்திரி ஊழியர்களும், நோயாளிகளும் வெளிநோயாளர் பகுதியில் தேடுதல் நடத்தியும் தாலிக்கொடி கிடைக்கவில்லை. [இ]